**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 156/மா/2024**

**நாள்: 17.03.2025**

திரு. த. செல்வம்
காட்பாடி ....... முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
வேலூர் மாநகராட்சி ....... எதிர்மனுதாரர்

வேலூர், காட்பாடி, வள்ளி மலை ரோடு, V.T.K. நகர், எண்.25–ல் வசிக்கும் திரு.த.செல்வம் என்பவரின் 07.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.09.2024 அன்று பெறப்பட்டு 156/மா/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

வேலூர், காட்பாடி, வள்ளி மலை ரோடு, V.T.K. நகர், எண்.25–ல் வசிக்கும் திரு.த.செல்வம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"நான் முதல் தலைமுறை பட்டதாரியாகவும், தொழில் முனைவராகவும் உள்ளேன். வேலூர் மாநகராட்சியில் BEEMJI ENTERPRISE என்ற பெயரில் மூன்றாம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளேன். கடந்த 24.7.2024 அன்று வேலூர் மாநகராட்சி மண்டலம் 1–ல் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் பணி மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. அவ்வொப்பந்தத்தில் கலந்து கொள்ள 31.07.2024 கடைசி நாள் ஆகும். அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு ஒப்பந்தம் திறக்கப்பட வேண்டிய நாள் 31.07.2024 நேரம் 3.30. ஆனால் 18.08.2024 வரை ஒப்பந்தம் திறக்கப்படவில்லை. இது குறித்து வேலூர் மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவிப்பொறியாளர் திரு.சங்கரநாராயணன் அவர்களை தொடர்பு கொண்டு ஏன் இன்னும் திறக்கப்படவில்லை என கேட்ட போது பொறுப்பற்ற முறையில் open செய்கிறோம் என பதில் அளித்தார். பின் 02.08.2024 தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்கு அனுபவ சான்று இல்லை எனக் கேட்டதற்கு, CONTRACTOR DOCUMENT–ல் PAGE NO.56–ல் உள்ளது எனத் தெரிவித்தேன். ஆவணங்களை சரிவர பார்க்காமல் இந்த ஒப்பந்தப்புள்ளியில் இருந்து வெளியேற்றும் நோக்கத்தோடு என்னிடம் உரையாடினார். பின்பு 19.08.2024 அன்று ஒப்பந்தமானது திறக்கப்பட்டுள்ளது. அதில் ஒப்பந்தப்புள்ளி அனுபவம் எனக்கு இல்லை என்று காரணம் காட்டி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. போதிய அனுபவமும் மற்றும் அனுபவ சான்று விண்ணப்பித்த ஒப்பந்தப்புள்ளியிலேயே இருந்தது என்றும் அந்த ஒப்பந்த பணியினை எடுத்து செய்யக்கூடாது என்றும், மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா அவர்களின் உறவினர் மற்றும் பினாமியான GPKR CONSTRUCTION என்பவருக்கு ஒப்பந்தப்புள்ளி பணி சேர வேண்டும் என்னும் நோக்கில்

ஒப்பந்தப்புள்ளி விதிகளை மீறி அன்னாருக்கு சாதகமாக மாநகராட்சி அதிகாரிகள் எனது ஒப்பந்தப்புள்ளியை ஏற்காமல் நிராகரித்து உள்ளனர். உதவிப்பொறியாளர் அவர்களை இதுகுறித்து தகவல் தெரிந்து கொள்ள தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, 39.14 இலட்சத்திற்கு அனுபவ சான்று தேவையில்லை என்றும், 40.00 லட்சத்திற்கு அனுபவ சான்று வேண்டுமென தெரிவித்தார். அவரிடம் TENDER DOCUMENT–ல் VALUE PUT TO TENDERS (Rs.39.14) தான் உள்ளது எனவும், estimate cost Rs.40.00 லட்சம் அதற்கு 20.00 லட்சம் சான்று வேண்டும் என கேட்பது என்னை நிராகரிக்கும் நோக்கில் செயல்படுவதை காட்டுகிறது என சொன்ன போது அவர் இது தான் இங்கு rule என கூறி எனது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்காமல் நிராகரித்தார்.

மேலும் இதே பணிக்கான ஒப்பந்தம் வைக்கப்பட்ட போது அதில் நான் கலந்து கொண்டேன். போட்டியாளர்கள் யாரும் இல்லாததால் என்னை SINGLE TENDERER என்று கூறி ஒப்பந்தத்தினை ரத்து செய்து விட்டார்கள். மறு ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. மறுஒப்பந்தத்திலும் நான் கலந்து கொண்டு போட்டியிடுவேன் என்ற விவரம் அறிந்த மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா அவர்களின் உறவினர் மற்றும் பினாமியான GPKR CONSTRUCTION என்பவர் ஒப்பந்தப்புள்ளி நடத்துவதற்கு முன்பே எங்களுடைய அலுவலகத்திற்கு வந்து ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள வேண்டாமென்று கூறினார். அதற்கு நான் முடியாது என்று கூறிவிட்டேன். பின்பு ஒப்பந்தத்தில் நான் கலந்து கொண்டதும் L1 ஆக வருவேன் என்பதை அறிந்த தி.மு.க. கட்சியினைச் சேர்ந்த நபர்களை வைத்து என்னிடம் பேசி ஒப்பந்தப்புள்ளியினை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டுமென கூறினார்கள். நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. சட்டத்திற்கு எதிராக பதிவு செய்து பணிகளை எடுத்து செய்து வரும் மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா அவர்களின் உறவினர் மற்றும் பினாமியான GPKR CONSTRUCTION என்பவருக்கு இந்த பணி கிடைக்க வேண்டுமென்பதற்காக மாநகராட்சி அதிகாரிகள் தவறாக ஒரு காரணத்தைக் கூறி எனது ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்துள்ளது குறித்து விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், மேலும் எனது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொண்டு (REVALUATION) மறு மதிப்பீடு செய்யவும், அதன் பின்பு (PRICE BID) விலை ஏலம் திறக்கவும் உத்தரவிட வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.09.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 18.10.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"வேலூர் மாநகராட்சி மண்டலம் 1, வார்டு எண்.7–ல் திருவள்ளுவர் நகர், சாஸ்திரி நகர் முத்தமிழ் நகர் 4வது தெரு, முத்தமிழ் நகர் 5வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.40.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து 26.02.2024 நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதியும், 28.02.2024–ல் மாநகர பொறியாளரிடம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு 21.03.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் Beemji Enterprises, No.25 VTK Nagar, Vallimalai Road, Katpadi, Vellore என்ற நிறுவனம் மட்டும் கலந்து கொண்டார்கள். 12.06.2024 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப குழுக் கூட்டத்தில் முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் போட்டியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யலாம் என தொழில்நுட்ப குழுவில் முடிவு செய்யப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி 31.07.2024 அன்று கோரப்பட்டது. அதில் கலந்து கொண்டவர்களின் விவரம்:

1. M/s GPKR Construction, No.32/19, Kambar Street, Dharapadavedu, Katpadi, Vellore-632 006.

2. M/s BEEMJI Enterprise, No.25, VTK Nagar, Vallimalai Road, Katpadi, Vellore-632 006.
3. Thiru S. Ramanan, No.482, Kambar Street, G.C. Colony, Gandhi Nagar, Vellore-632 006.

31.07.2024 அன்று 15.30 மணிஅளவில் Tender Scrutiny Committee உறுப்பினர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதின் விவரம்:

| Sl. No. | Compliance criteria as per clause | Details | Check | M/s GPKR Constru ction, No.32/19, Kambar Street, Dharapa davedu, Katpadi, Vellore-632 006. | M/s BEEMJI Enterprise, No.25, VTK Nagar, Vallimalai Road, Katpadi, Vellore-632 007. | Thiru S. Ramanan, No.482, Kambar Street, G.C. Colony, Gandhi Nagar, Vellore-632 006. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15.15.1 | Earned Money Deposit Whether Earnest Money Deposit at 1% of the contract Estimate Amount in the form of Banker's cheque, Demand Draft enclosed? (EMD in any other form will not be accepted) | YES/ NO | DD No.775687 Rs.40,000/- Date: 30.07.2024 Bank: Indian Bank, Katpadi Branch | DD No. 143537 Rs.40,000/- Date: 31.07.2024 Bank: Canara Bank, Katpadi Branch | DD No.828893 Rs.40,000/- Date: 30.07.2024 Bank: TMB Bank, Katpadi Branch |
| 2 | 4.1.A.1 | Whether copy of certificate of registration as class v contractor, with proof for its currency enclosed? | YES/ NO | Yes enclosed | Yes enclosed | Yes enclosed |
| 3 | 4.1.A.2 | Whether proof for being in the Civil Engineering construction field atleast for the past Five Year (2918-19 to 2022-23) enclosed? [Bidder should submit the auidited balance sheet for the last five years] | YES/ NO | 2018-19 – Rs.18,44,300/- 2019-20 – Rs.19,81,611/- 2020-21 – Rs.21,21,602/- 2021-22 – Rs.65,21,045/- 2022-23 – Rs.85,71,203/- | 2018-19 – Rs.4,68,999/- 2019-20 – Rs.6,18,001/- 2020-21 – Rs.8,49,295/- 2021-22 – Rs.6,78,927/- 2022-23 – Rs.23,20,560/- | 2018-19 – Rs.18,49,261/- 2019-20 – Rs.1,40,90,431/- 2020-21 – Rs.10,03,824/- 2021-22 – Rs.10,03,0824/- 2022-23 – Rs.11,90,526/- |
| 4 | 4.1.A.3 | Whether proof for having an annual minimum financial turn over of not less than 50% of the Estimate Amount in a financial year in the preceding "Three year (2020-21, 2021-22, 2022-23) enclosed? | YES/ NO | 2020-21 – Rs.21,21,602/- 2021-22 – Rs.65,21,045/- 2022-23 – Rs.85,71,203/- | 2020-21 – Rs.8,49,295/- 2021-22 – Rs.6,78,927/- 2022-23 – Rs.23,20,560/- | 2020-21 – Rs.10,03,824/- 2021-22 – Rs.11,90,526/- --- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 4.1.A.4 | Whether proof for having satisfactorily completed Drain and Culvert work(s) of not less than 50% of the value put to tender under a "single agreement" in any one of the preceding three years (2020-21, 2021-22, 2022-23) for Government Department/ Board/ Government undertaking enclosed? | YES/ NO | The Experience Certificate issued. The City Engineer Vellore Corporation R.O.C. No.5713/2023/ E2 dated 16.8.2023 (Rs.27,00,000) | The Experience Certificate issued Block Development Officerf R.O.C No.ஆ2/707/2023 (Rs.20,00,000) Genuineness Certificate send to BDO Office Date 06.08.2024 – Value Put to tender amount Rs.1981815.00 (BDO Letter date 08.08.24). This amount is less than the 50% of the value, hence it is not qualified. | No |
| 6 | 4.1.A.5 | Whether Proof of the applicant for having working capital sufficient to finance at least 15% of value put to tender enclosed? (Working capital will be calculated by adding the amount available in the bank account of the applicant on the date of submission of application and the unutilized amount of overdraft / credit facility extended to the applicant by the Nationalized / Scheduled banks) | YES/ NO | Yes | Yes | Yes |
| 7 | 4.1.B | Whether all the certificates are Notarized? | YES/ NO | Yes | Yes | No |

மேற்படி Tender Document clause 4.1.A.4 தெரிவித்துள்ளபடி, இப்பணிக்கான அனுபவ சான்று, மதிப்பீட்டு தொகை ரூ.**40.00** இலட்சத்தில் (**50%**) **20.00** இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். ஆனால் M/s BEEMJI Enterprise நிறுவனம் ரூ.**19,81,815/–** பணி மேற்கொண்டதற்கான சான்று பெறப்பட்டதால் **13.08.2024** அன்று நடைபெற்ற தொழில்நுட்ப குழு கூட்டத்தில் (Technical Bid Evaluation Meeting Minutes) தொழில்நுட்ப ஆவணங்கள் பூர்த்தி செய்யாததால் M/s BEEMJI Enterprise நிறுவனம் மற்றும் Thiru S. Ramanan ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப தகுதி இல்லை என்று முடிவு செய்யப்பட்டு, தகுதி வாய்ந்த நிறுவனமாக M/s GPKR Construction நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்கப்பட்டு **10.09.2024**ல் பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது என்றும், இதில் எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையரும் 23.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. த. செல்வம் என்பவர் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"நான் வேலூர் மாநகராட்சியில் BEEMJI ENTERPRISE என்ற பெயரில் மூன்றாம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளேன். கடந்த 24.07.2024 அன்று வேலூர் மாநகராட்சியானது மண்டலம் 1–ல் கழிவு நீர் கால்வாய் அமைத்தல் பணி தொடர்பாக மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. அதில் கலந்து கொள்ள 31.07.2024 கடைசி நாள் ஆகும். அந்த ஒப்பந்தப்புள்ளி 31.07.2024 அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட வேண்டும். ஆனால் 18.08.2024 அன்று வரை திறக்கப்படவில்லை. இது தொடர்பாக வேலூர் மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவிப்பொறியாளரிடம் கேட்ட பொழுது பொறுப்பற்ற முறையில் Open செய்கிறோம் என தெரிவித்தார். மேலும் என்னுடைய அனுபவ சான்றினை கேட்டதால் அது ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தேன். இதுநாள் வரை அந்த ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படவில்லை. அதனை திறக்க உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டும். மேலும் ஒரு தலை பட்சமாக செயல்படும் மாநகராட்சி அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஒப்பந்த புள்ளியானது (Qualification of Bidder) அதாவது ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தேவையான ஆவணங்கள் யாதெனில் அனுபவ சான்றானது 50% of the Value put to tender என கூறப்பட்டது. நான் எனது அனுபவ சான்று 20 இலட்சம் செய்த வேலை சான்று சமர்ப்பித்துள்ளேன். The Value of the tender 39.14 இலட்சம் அதில் பாதி 50% சதவீகிதம் ரூ.19.57 இலட்சம் தேவை, 20 இலட்சம் அனுபவ சான்று சமர்ப்பித்தேன். அவர்கள் மெய்த்தன்மை சான்று நான் வேலை செய்த கே.வி.குப்பம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பெற்றுள்ளனர். அதில் எனது (Value of work zone) மதிப்பு ரூ.19,81,815/– ஆகும். அவர்கள் குறிப்பிட்ட தேவையான அனுபவ மதிப்பு என்னிடம் உள்ளது என்றும் என்னை நிராகரிக்க Estimate Value 40 இலட்சம் அனுபவ சான்று 20 இலட்சத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும் என Tender Document Condittion-ல் இல்லாத ஒன்றை காரணம் காட்டி என்னை நிராகரித்து அந்த வேலையை GPRK எனும், மாநகராட்சி மண்டலம் 1 பெருங்குழு தலைவர் திருமதி. புஷ்பலதா வன்னியராஜா என்பவரின் உறவினர் அவர்களுக்கு பணி அனுமதி அளித்து அனைத்து அதிகாரிகளும் என்மீது ஒப்பந்த விதி மீறல் (Tender Violation) செய்துள்ளனர். எனவே

1) அந்த ஒப்பந்ததாரர் அவர்களை Black List.ல் சேர்க்கவும்,
2) திருமதி. புஷ்பலதா வன்னியராஜா அவர்களை பதவி நீக்கம் செய்யவும்,
3) Tender Inviting Authority மற்றும் Evaluation செய்த A E திரு.சங்கர நாராயணன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

6.எதிர்மனுதாரர்களான வேலூர் மாநகராட்சியில் உதவி ஆணையராகப் பணிபுரியும் திரு.B.மருதபாபு மற்றும் உதவி செயற்பொறியாளராகப் பணிபுரியும் திரு.ரா.சந்திரசேகரன் ஆகியோர் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளார்கள்:

"வேலூர் மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.7–ல் திருவள்ளுவர் நகர், சாஸ்திரி நகர், முத்தமிழ் நகர் 4வது தெரு, 5வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.40.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து 26.02.2024 நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் 28.02.2024–ல் மாநகராட்சி பொறியாளாரிடம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு 21.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் BEEMJI ENTERPRISE நிறுவனம் மட்டும் கலந்து கொண்டது. 12.06.2024 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப குழு கூட்டத்தில் முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் போட்டியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யலாம் என

Tender Scrutiny Committee குழுவால் முடிவு செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி 31.07.2024 அன்று கோரப்பட்டது. அதில்,

1) M/s. GPKR Construction
2) M/s. Beemji Enterprises மற்றும்
3) திரு.S.ரமணன்

ஆகியோர் கலந்து கொண்டதின் பேரில் 31.07.2024 அன்று மதியம் 3.30 மணியளவில் Tender Scrutiny Committee உறுப்பினர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி Tender Document Clause 4.1-A.4ல் தெரிவித்துள்ளபடி இப்பணிக்கான அனுபவ சான்று, மதிப்பீட்டு தொகை ரூ.40.00 இலட்சத்தில் (50%) ரூ.20.00 இலட்சத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் M/s. Beemji Enterprises நிறுவனம் ரூ19,81,815/–க்கு மட்டுமே பணி மேற்கொண்டதற்கான சான்று பெறப்பட்டதால் 13.08.2024 அன்று நடைபெற்ற Tender Scrutiny Committee கூட்டத்தில் (Technical Bid Evolution meeting minutes) தொழில்நுட்ப ஆவணங்கள் பூர்த்தி செய்யாததால் M/s. Beemji Enterprises நிறுவனம் மற்றும் திரு.S.ரமணன் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப தகுதி இல்லை என்று முடிவு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த நிறுவனமாக M/s.GPKR Construction நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்கப்பட்டு 10.09.2024–ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது என்றும் இதில் எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

7.மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் விளக்க அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சியில் உதவி ஆணையராகப் பணிபுரியும் திரு. B.மருதபாபு மற்றும் உதவி செயற்பொறியாளராகப் பணிபுரியும் திரு.ரா.சந்திரசேகரன் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

8.மனுதாரர் தான் முதல் தலைமுறை பட்டதாரி என்றும், தொழில் முனைவராகவும் உள்ளதாகவும், வேலூர் மாநகராட்சியில் BEEMJI ENTERPRISE என்ற பெயரில் மூன்றாம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளதாகவும், கடந்த 24.7.2024 அன்று வேலூர் மாநகராட்சி மண்டலம் 1–ல் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் பணி மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியது எனவும், அவ்வொப்பந்தத்தில் கலந்து கொள்ள 31.07.2024 கடைசி நாள் என்பதால் கலந்து கொண்டதாகவும், ஆனால் அவ்வொப்பந்தப்புள்ளி அந்நாளில் திறக்கப்படவில்லை எனவும், மேலும் 18.08.2024 வரை அவ்வொப்பந்தப்புள்ளி திறக்கப்படவில்லை என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் இதற்கு காரணமாக உள்ள வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், பெருங்குழுத் தலைவர் அவர்களை பதவி நீக்கம் செய்யவும், ஒப்பந்தப் பணி செய்த ஒப்பந்ததாரரை **Black List–ல்** சேர்க்கவும், இம்முறை மன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

வேலூர் மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.7–ல் திருவள்ளுவர் நகர், சாஸ்திரி நகர், முத்தமிழ் நகர் 4வது மற்றும் 5வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.40.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து 26.02.2024 நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் 28.02.2024–ல் மாநகராட்சி பொறியாளரிடம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு 21.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதில் BEEMJI ENTERPRISE நிறுவனம் மட்டும் கலந்து கொண்டதில், 12.06.2024 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப குழு கூட்டத்தில் முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் போட்டியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யலாம் என தொழில்நுட்ப குழுவால் முடிவு செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி 31.07.2024 அன்று கோரப்பட்டுள்ளது அதில் (1) M/s. GPKR Construction, (2) M/s. Beemji Enterprises மற்றும் (3) திரு.S.ரமணன் ஆகியோர் கலந்து கொண்டதின் பேரில் 31.07.2024 அன்று மதியம் 3.30 மணியளவில் Tender Scrutiny Committee உறுப்பினர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி

திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, Tender Document Clause 4.1-A.4-ல் தெரிவித்துள்ளபடி இப்பணிக்கான அனுபவ சான்று, மதிப்பீட்டு தொகை ரூ.40.00 இலட்சத்தில் (50%) ரூ.20.00 இலட்சத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் M/s.Beemji Enterprises நிறுவனம் ரூ19,81,815/–க்கு மட்டுமே பணி மேற்கொண்டதற்கான சான்று பெறப்பட்டதால் 13.08.2024 அன்று நடைபெற்ற Tender Scrutiny Committee கூட்டத்தில் (Technical Bid Evolution meeting minutes) தொழில்நுட்ப ஆவணங்கள் பூர்த்தி செய்யாததால் M/s.Beemji Enterprises நிறுவனம் மற்றும் திரு.S.ரமணன் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப தகுதி இல்லை என்று முடிவு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த நிறுவனமாக இருந்த M/s.GPKR Construction நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்கப்பட்டு 10.09.2024–ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது என்பதை வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அம்மாநகராட்சி அலுவலர்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

வேலூர் மாநகராட்சி Ward 7, Zone 7ல் Construction of Storm Water Drain and culvert at Thiruvallur Street, Muthamil Nagar 4th Street, and 5th Street, பணி செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மேற்கண்ட பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 இலட்சம் என்றும், Value put to tender–ல் ரூ.39.14 இலட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நிபந்தனை 4 (4)ல்

> "Satisfactorily completed BT Road Works not less than 50% of the Value put to tender under a 'Single Agreement " in any one of the preceding three year (2018-19 to 2022-25) for Government Department / Board / Government undertaking என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், the value put to tender Rs.39.14 இலட்சம் அதில் பாதி 50% சதவீதம் ரூ.19.57 இலட்சம் தேவை, இருப்பினும் மனுதாரர் ரூ.19,81,815/–ற்கான சான்று சமர்ப்பித்துள்ள நிலையில், மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை 4.4 முறையாக பின்பற்றாமல் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டது குறித்து சரியான விளக்கம் மாநகராட்சி அலுவலர்களால் விசாரணையில் அளிக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை மீறி செயல்பட்ட வேலூர் மாநகராட்சி அலுவலர் மீதும் Tender Scrutiny Committee உறுப்பினர்கள் மீதும் உரிய துறை நடவடிக்கை எடுக்குமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. த. செல்வம்,
25, V.T.K. நகர், வள்ளிமலை ரோடு,
காட்பாடி, வேலூர்–632 007.

2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.